
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1160

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

165

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...





# உள்ளாட்சியில் நியமனம்!

## மகிழும் மாற்றுத்திறனாளிகள்!

2025 பிப்ரவரி 27-ஆம் தேதி, சென்னை, கொளத்தூர், பெரியார் நகரில் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனையைத் திறந்துவைத்து உரையாற்றிய, ‘திராவிட மாடல் நாயகர்’ தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அவரது பிறந்தநாள் சிறப்பு அறிவிப்பாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் திட்டத்தை அன்று அறிவித்தார். இந்தியாவில் வேறெந்த மாநிலமும் செயல்படுத்தாத அந்த அறிவிப்பு ‘உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம்.’

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்கிற அந்த அறிவிப்பின் மூலம், மாற்றுத்திறனாளிகளை மக்கள் பிரதிநிதிகளாக மாற்றும் உயரிய நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

சொன்னதுபோலவே அதை நிறைவேற்றும் வகையில், ஏப்ரல் மாதம் 16-ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடரில், நகராட்சி நிர்வாகத்துறை சார்பில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, தமிழ்நாடு நகர்ப்புற ஊராட்சிகள் சட்டம் 1998 ஆகியவற்றில் திருத்தங்களை முன்மொழிந்தார் முதலமைச்சர்.

### வல்லமை பெறும் மாற்றுத்திறனாளிகள்!

‘‘இந்த சட்டமுன்வடிவுகள் மூலம், தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், அதாவது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாகத் தேர்தலில் போட்டியிடாமல், நியமன முறையில் உறுப்பினராக ஆக்கப் படுவார்கள்.

உள்ளாட்சி அமைப்புகளில், மாற்றுத்திறனாளி களுடைய பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு, அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளையும், சிறப்புரிமைகளையும் சமமாகப் பெறுவதற்கு, இந்தச் சட்டமுன்வடிவுகள் வழிவகுக்கும். இது, ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்துகிற சமூகநீதியை அடைவதற்கான மற்றுமொரு முன்னெடுப்பாகும்.

இந்த மசோதாக்கள் மூலம், மாற்றுத்திறனாளி களின் குரல், உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை வழிநடத்துகிற வல்லமை பெற்றவர்களாகத் திகழ்வார்கள்” எனப் பெருமையுடன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

அந்த சட்டம் அமல்படுத்தப்படும் வரை தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 35 பேர் மட்டுமே மாற்றுத்திறனாளிகளாக இருந்தனர். இந்தச் சட்டத்துக்குப் பின்னர் சுமார் 14,000 மாற்றுத்திறனாளிகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்படும் வாய்ப்பு உருவானது.

### 14,000 பேர்

குறிப்பாக, நகர்ப்புற உள்ளாட்சிகளில் 650 பேர், கிராமப் பஞ்சாயத்துகளில் 12,913 பேர், ஊராட்சி ஒன்றியங்களில் 388 பேர், மாவட்ட ஊராட்சிகளில் 37 பேர் மாற்றுத் திறனாளி உறுப்பினர்களாக இடம்பெறுவர். உரிய தகுதி கொண்டோரிடமிருந்து விண்ணப் பங்கள் பெறப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சிகளில் மாற்றுத்திறனாளி ஒருவரை நியமிக்கும்போது, சம்பந்தப்பட்ட ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட அந்த நியமனம் கூடுதல் இடமாக இருக்கும். ஊராட்சியின் பதவிக்காலத்துடன், நியமன உறுப்பினரின் பதவிக்காலமும் முடிவடையும்.





நகர்ப்புற உள்ளாட்சிகளைப் பொறுத்தவரை, மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 100-க்கு அதிகமாகும்போது, மாற்றுத்திறனாளிகள் இருவர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். இரண்டு பேர் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலையில், அதில் பெண் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

இந்த நியமன உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆனாலும், அவர்களின் குரல் மக்கள் சபையில் ஒலிக்கும் சூழல் உருவாகியுள்ளது. இதனால், மாற்றுத் திறனாளிகள் தங்கள் கோரிக்கைகள் குறித்து, மக்கள் மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

இந்த சட்டத்தின் மூலம், விளிம்பு நிலை மக்களான மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் பொருந்திய அவைகளில் இடம்பெற்றுள்ளனர். தங்களுடைய வாய்ப்புகளையும் உரிமைகளையும் சமமாக பெறும் இடத்தில் அவர்களின் குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

### குரல் ஒலிக்கும்

இந்திய அளவில் பொதுத்தேர்தல் என்றாலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடக்கும் தேர்தல் என்றாலும், அதில் மாற்றுத்திறனாளிகள் போட்டியிட்டு வெல்வது சரிசமமாக இல்லை. மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்திற்கே சவாலானச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் நிலையில், மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்தல்களில் போட்டியிடுவது அவர்களுக்கு எட்டாதக் கனியாகவே உள்ளது. அவர்களின் கோரிக்கைகள், குரல்கள் நேரடியாக மக்கள் மன்றத்தில் பேசப்படுவது சாத்தியமில்லாத நிலையில், தமிழ்நாடு அரசின் இந்த சட்டம் அவர்களின் நெடுநாள் ஏக்கத்தை நிறைவேற்றியுள்ளது. அதைவிடவும் முக்கியமாக, அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.

இந்த சட்டத்தை நிறைவேற்றிய அன்று “இந்த சட்டம் கொண்டு வருவதை என் வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன். விளிம்புநிலை மக்களுக்காக இப்படித் தொண்டாற்றுவது என் வாழ்நாள் கடமை” என்றும் சட்டமன்றத்தில் முழங்கினார் முதலமைச்சர்.

**இந்த சட்டத்தினை நிறைவேற்றிய அன்று “இந்த சட்டம் கொண்டு வருவதை என் வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன். விளிம்புநிலை மக்களுக்காக இப்படித் தொண்டாற்றுவது என் வாழ்நாள் கடமை” என்றார் முதலமைச்சர்.**

இந்தியாவிலேயே, அதிக எண்ணிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தர உதவித்தொகை வழங்கும் மாநிலம் தமிழ்நாடுதான். தவிர, அவர்களுக்கான உதவித்தொகையை 1,500 ரூபாயில் இருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கவும் 2.0 ஆட்சியில் வாக்குறுதி அளித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும், கூடவே, அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் காக்கப்பட வேண்டும் என்பதே எல்லோருக்கும் எல்லாம் என இயங்கும் திராவிட மாடல் அரசின் இலட்சியம். குரலற்றவர்களின் குரலுக்கு செவிசாய்க்கும் அந்தக் கடமை 2.0 ஆட்சியிலும் காத்திருக்கிறது.

...சாதனை தொடரும்

## எதிர்காலத்தை உருவாக்கி வரும் தி.மு.க.!

சமூக வலைதளங்களில் நான் ஏன் தி.மு.க.வை ஆதரிக்கிறேன், எனப் பலரும் பகிர்ந்து வரும் கருத்துகள், கடந்த 50 ஆண்டு களுக்கும் மேற்பட்ட வரலாற்றைத் திரும்பிப்பார்க்க வைக்கின்றன. கடந்த 5 ஆண்டுகளில் தீட்டப்பட்ட திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளும், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து வருகின்றனர். பூங்கோதை விஷால் என்பவர், தங்கள் அலுவலகத்தில் நடந்த நிகழ்வு என எழுதியுள்ள பதிவு, பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

“சிவகங்கை மாவட்டத்தில், ஒரு கிராமத்திலிருந்து வந்த ஒரு பெண், எங்களோட ஆபீஸுக்கு இன்டர்ன்ஷிப் வந்திருந்தாங்க. அவங்க பின்னணி பார்த்தா, பெரிய வசதி எதுவும் இல்ல, சாதாரண குடும்பம்.

நான் அவங்களிடம் கேட்டேன், “நீங்க எப்படி இவ்வளவு பெரிய இடத்துக்கு வந்து படிக்கிறீங்க?” அப்போ அவங்க சொன்ன பதில் எனக்கு ரொம்ப பெருமையா இருந்தது.

“நான் முதல்வன் திட்டம் மூலம்தான் நாங்க 7-8 பேர் National Institute of Fashion Technology (NIFT Delhi)-யில் படிக்கிறோம். இந்த வாய்ப்பு இல்லையென்றால், எங்களுக்கு இப்படி ஒரு கல்வி கிடைச்சிருக்காது”ன்னு சொன்னாங்க.

ஒரு கிராமத்திலிருந்து வந்த ஒரு பெண்ணை, நாட்டின் தலைநகர்ல இருக்கும் உயர்நிலை கல்வி நிறுவனத்துக்குக் கொண்டுபோய் சேர்க்குற அளவுக்கு ஒரு திட்டம் வேலை செய்கிறது. இது சாதாரண விஷயம் இல்ல.

இந்த மாதிரி பல பசங்களுக்கும், குறிப்பா பொருளாதார வசதி இல்லாதவர்களுக்கும், ஒரு பெரிய எதிர்காலத்தை உருவாக்குற மாதிரி திட்டங்களை நடைமுறைப்படுத்துறதுதான் இன்றைய மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசாங்கம்.

கடந்த 5 வருடங்களா இப்படிப் பல குடும்பங்களின் வாழ்க்கையையே மாற்றி இருக்காங்க. அதனாலதான் நான் தி.மு.க.வை ஆதரிக்கிறேன்” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### கடுகளவும் மறக்காத சந்திப்பு!



தே.செ.மனோகரன்

2001-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், திருநெல் வேலி மாநகராட்சி, வார்டு 13-இல் வெற்றி பெற்று, மாமன்ற உறுப்பினரானேன். அப்போது இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளராக இருந்த நான், அண்ணா அறிவாலயத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். கால் நூற்றாண்டு காலம் ஆகியிருந்தாலும், கடுகளவும் மறக்கவில்லை, கழகத் தலைவரை சந்தித்த அந்த நாளையும், அந்த நிமிடங்களையும்!

**- தே.செ.மனோகரன்,**
**9-வது வட்டக் கழகச் செயலாளர்,**
**பாளையங்கோட்டை வடக்குப்பகுதி,**
**நெல்லை மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள் — கருவூலம்

### உற்சாகத்துடன் பணியாற்றவும்!

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல், 142 இடங்களில் போட்டியிட்ட கழகம், 50 இடங்களை வென்றது. காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட பேரறிஞர் அண்ணா, வெற்றி வாய்ப்பை இழந்தார். அந்தத் தோல்வி கேட்டு துவண்ட கழகத்தினரை ‘துவள வேண்டாம்’ என ஆற்றுப்படுத்தினார் அண்ணா. ‘வெற்றி பெற்று வருகிறது கழகம். நாட்டு மக்களின் பேராதரவு வளர்ந்து வருகிறது. இதை எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்-பெருமைப்படுங்கள், புதிய உற்சாகத் துடன் பணியாற்றுங்கள்’ என ஊக்கப்படுத்தினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900